ஸ்கூலென்றும், கோவிலென்றும், பிரசங்கமென்றும், ஜனனமிஷனென்றும், புத்தகமென்றும், டிராக்ட்என்றும் இன்னும் ஏதேதோ மார்க்கங்களை ஏற்படுத்தி, ஒருவர் போனாலும் ஒருவரிருந்து நடத்தவும், வேலைக்குத்தக்க சம்பளம் இனாம் முதலியவை கொடுக்கவும் வைத்திருக்கின்றார்கள். அவர்களை ஜெயிப்பது நம்மாலாகாது. மிஷன்களும் கவர்ன்மெண்டுபோலவே யிருக்கின்றன. ஆதலால் நாம் எங்கும் இதுவிஷயமாகச் சபைகள் பலவிடங்களில் கூடி, எல்லாம் மூலபைக்குக் கிளைகளாக்கி, மிஷன்மாரைப்போல் ஒவ்வொரு காரியத்தையும் செய்வோமாயின், வெகுசீக்கிரத்தில் நமது காரியஞ் சித்தியாகும். கல்வி விர்த்தியாகுமிக்காலத்தில் கிறிஸ்துமதம் தலையெடுக்கவே மாட்டாது. மதாபிமானமுள்ள ஒவ்வொருவரும் ஆங்காங்குள்ள கிறிஸ்தவரை இந்துமதஸதராக்க முயலவேண்டும். இதை நம்மவர் ஓர் பெரிய விரதமாகக் கொள்ளவேண்டும்.

மடத்தார் இந்துசமயஸ்தாபனையின் பொருட்டும், கல்விச்சாலை விருத்தியின்பொருட்டும் கவனிக்கவேண்டும். பாதிரிகள் செய்யும் வேலை யாதோ, அதையே செய்ய மடத்தார் ஏற்பட்டமையால், அதை மறந்து வேறுகாரியங்களைச் செய்வது தக்கதன்றென உணரவேண்டும். அங்ஙனம் செய்யாவிடில் நாம் சும்மா இருத்தல்கூடாது. பயனில்லா மடம் இருந்தாலென்ன? இல்லாமற்போனாலென்ன? சொந்தச்சுகத்தினிமித்தந்தானோ மடம் கட்டி, கொள்ளைகொள்ளையாகப்பணத்தைவைத்து மானியங்களை வைத்தது? எந்தெந்தக் காலத்தில் எந்தெந்தப் பிரகாரம் தங்கள் கடமைகளைச் செலுத்தவேண்டுமோ, அவ்வாறு செய்ய வேண்டாமோ? பாதிரிகள் நமது மதத்தரைக் கிறிஸ்தவராக்கி வருவதை, இனித் தடுக்காவிடில் இம்மடத்தார் வேறுவேலை பார்த்துக்கொண்டு போவதே யுக்தமாகும். இல்லாவிடில் இனிப் பலரால் குறைசொல்லப்படுவார்கள்.

கிறிஸ்துமத வைரி.

மகா-௱-௱-ஸ்ரீ ப்ரம்மவித்தியாபத்திராதிபரவர்களுக்கு மூன் ஓர் விண்ணப்பம்.

ஸ்ரீ பகவத்பாதசுவாமிகளவர்கள் பிரபாகராசரியாருடைய பாலனைநோக்கி நீ யார்? என்று வினவினபோது, அக்குழந்தை, கீர்வாணபாஷையில் கஉ- சுலோகங்களால் தனக்கு ஜடத்தன்மையில்லையென்றும், ஜடங்களுள் சாக்ஷியாயிருப்பது தானென்றும் மிகத் தெளிவா யுரைத்தனவொன்று, ப்ரம்மவித்தியாபத்திரிகையினால் தெரிந்துகொண்டேன். அந்தப் பன்னிரண்டு சுலோகங்களின் உட்பொருள்களைத் தருமங்கரோதுடகூடிகளெல்லாம் அறிந்துநடக்கும்பொருட்டு, பத்திரிகைமூலமாய் வெளிப்படுத்த ஒடுக்கத்துடன் பிரார்த்திக்கிறேன். கிஞ்சிக்ஞன்.

☞ கிஞ்சிக்ஞர் கோரியவாறு இப்பத்திரிகையில் வெளியிட்டிருக்கின்றோம். ப—ர்.

சிதம்பரம்

கஞ்சித்தொட்டி யாசகதர்மம்.

இஃது கும்பகோணம் நரசய்யரால் ஏற்படுத்தி நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதன் உத்தேசம், வேலைசெய்யச் சக்தியற்ற கூன், குருடு, முடம் முதலிய ஜனங்களைக் கஞ்சி வார்த்து ரக்ஷிக்கவேண்டுமென்பதே. இது ஒருபெரிய காரியமாயினும், தீனர்களிடம் தயவுள்ள தனவான்கள் உதவியிருந்தால் நிறைவேறுமென்பதற்கு ஐயமில்லை. உதவிசெய்ய விருப்பமுள்ளவர்கள் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம் முதலிய தானியங்களாகவாயினும், திரவியமாகவாயினும் சகாயஞ்செய்யப் பிரார்த்திக்கிறேன். இது நாளது மார்கழிமாசத்திற்குள் தயவு செய்து அனுப்பவேண்டும்.

C. S. நரசய்யர்,
கஞ்சித்தொட்டி யாசகர்,
சிதம்பரம்.

சிதம்பரம்
ப்ரம்மவித்தயாயந்திரசாலையில்
விற்கப்படும்புத்தகங்கள்.

		விலை.			தபாற்கூலி.		
		ரூ	அ	பை	ரூ	அ	பை
மகேஸ்வரதண்டகம்.	கிரந்தம்	,,	௧	,,	,,	,,	௬
ஆரியாதண்டகம். லட்சிமிஸதோத்திரம்	(கிரந்தம்)	,,	௧	,,	,,	,,	௬
சாமருத்திரசங்கிதாபாஷியம்	,,	,,	௮	,,	,,	௧	,,
விசாகதுலாபாரபிரபந்தம்.	,,	,,	௧	௬	,,	,,	௬
சிவதத்துவவிவேகம்.	,,	௨	,,	,,	,,	௨	௬
ஆன்மாவும்சரீரமும்	தமிழ்	,,	௧	,,	,,	,,	௬
நீதிக்கீர்த்தனை.	,,	,,	௧	௬	,,	,,	௬
சர்மிஷ்டாவிஜயம்-	தெலுங்கு	,,	௬	,,	,,	,,	௬
ஸ்ரீராமபத்திரவிஜயம்.	[கிரந்தம்)	,,	௮	,,	,,	௨	,,
பிரஸ்னோத்தரராமாயணம்	,,	,,	௩	,,	,,	௧	,,
ஸ்தோத்திரசங்கிரகம்.	,,	,,	௨	,,	,,	,,	௬
விசாகநட்சத்திரமாலிகை.	,,	,,	,,	௬	,,	,,	௬
துதிசங்கிரகம்	[தேவநாகரலிபி)	,,	௧	,,	,,	,,	௬
ராமாயணவினாவிடை.	[தெலுங்கு]	,,	௨	,,	,,	,,	௬
பகவத்கீதார்த்த தீபிகை	கிரந்தமும்தமிழுரையும்	௪	,,	,,	,,	௭	,,
ஆச்சரியதர்ப்பணம்	கிரந்தசுலோகம் தமிழுரையும்	௧	௮	,,	,,	௨	,,
சங்கரசரித்திரம்.	[தமிழ்]	,,	,,	௬	,,	,,	௬
சகாதேவசாஸ்திரம்.	,,	,,	௧	,,	,,	,,	௬
கந்தபுராணநவநீதம்.	,,	,,	௧௨	,,	,,	௧	,,
மாதர்நீதி.	,,	,,	௬	,,	,,	௧	,,
மனுமுறைகண்டவாசகம்.	,,	,,	௬	,,	,,	,,	௬
சீர்காழிப்புராணம்.	,,	,,	௮	,,	,,	௧	௬
அஷ்டாங்கயோகம்.	,,	,,	௫	,,	,,	,,	௬
கிறிஸ்துமதகண்டனம்.	,,	,,	௧	,,	,,	,,	௬
ஜனோபகாரம்.	,,	,,	௧	,,	,,	,,	௬

விளம்பரம்.

சென்னை, மதராஸ் ரிப்பன்பிரஸில் விற்கும் புத்தகங்கள்.

	விலை.	தபாற்கூலி.		
	அணா	ரூ	அ	பை
சர்வஜித்துவருஷத்திரிப்பன் பாக்கெட்பஞ்சாங்கம்.	௬	,,	௧	,,
கிறிஸ்துமதகண்டனம்.	௧	,,	,,	௬
ஜனோபகாரம்.	௧	,,	,,	௬
மனுமுறைகண்டவாசகம்.	௪	,,	௧	,,
மாதர்நீதி.	௬	,,	௧	

ரிபுகீதை.

இப்புத்தகம் சென்னை பெத்துநாயக்கன்பேட்டை ஏகவல்லியம்மன் வீதி, மேலண்டைவாடை 6. கெ- வீட்டில் அத்வைத விவேகசமாஜத்தி லொருவரான தி. ரே. திருவேங்கடபிள்ளை யவர்களிடம் ரூபா 2ரு. விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

[illegible]

☞ VOL 3
கூ. புத்தகம்.

பத்திர கிரயம்
1 வருஷ 2—12—0
6மீ 1—8—0
3மீ 0—14—0
1காபி- 0—2—6
இலங்கைக்கு,
3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம்
இருமுறை
பிரசுரஞ் செய்யப்படும்

☞ NO.4
இலக்கம்-௪

பத்திரகிரயத்தை மணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரப் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— கஅஅஅ ஹு ஆகஸ்டுமீ [illegible] சர்வதாரிஹு ஆவணிமீ [illegible] புதன்கிழமை.

[illegible]

வஜ்ரடங்கமும் இந்துஜெயபேரிகையும்

ஐயா, பத்திரிகாகண்பர்களே! தாங்களெல்லோரும் கிறிஸ்துமத கானனகுடாரி என்பவரை நம்பத்திரிகை வாயிலாக ஒருவாறு அறிந்திருப்பீர்களல்லவா? அவர் இதற்குமுன் "சிவனுந் தேவனா என்னுந்தீபநாவுக்காப்பு" என்றோர் மகுடஞ்சூட்டி ஓர்புத்தகத்தை எழுதி அச்சிட்டு வெளியிட் டிருக்கிறாரல்லவா? அதுவிஷயத்தில் எமது தாற்பரியத்தையும் வெளியிட்டிருக்கிறோம். அதே கிரந்தக்காரர் மேற்கண்ட இவ்விரண்டு புத்தகங்களையும் தெள்ளிய தமிழ்நடையில் எழுதிவெளியிட்டிருக்கிறார் அதன் பெயருக்கிசைந்த விஷயங்கள் அப்புத்தகங்களிலடங்கியிருக்கின்றன. வஜ்ரடங்கமென்னும் புத்தகத்தில், பாதிரிகளுக்கோர் நிருபமும். "நம்பிள்ளைகளைப்பாதிரிகள்கூட்டத்தில் சாரவிடப்படா" தென்பதும், ஏகோவாவென்னும் துஷ்டதேவதையினும் நமதுபரமேசுவரர் அருள்வள்ளலாம்,, என்பதும், "விக்கிரகாராதனை அத்தியாவசிக,, மென்பதும் "விக்கிரகங்களினாலே சித்தியுண்டா,, மென்பதும் "வழிபடுதற்கு ஆலயங்கள்வேண்டு,, மென்பதும் "தீமைநன்மைகளிலே ஒவ்வொருவனுஞ்சிறந்திருப்பான், கிறிஸ்தவர்களோ ஜனங்களைக்கடுவேதனை செய்து பொசுக்கிச்சேர்த்தலிலே தேர்ந்தவரா,, மென்பதும் ஆகஏழுவிஷயங்க[illegible]டங்கியிருக்கின்றன. இவைகளைப் [illegible]ற்றி விரிவாய காரணங்களும் அப்புத்தகத்திலேயே காணலாம். இரண்டாவது புத்தகத்திலோ! "கிறிஸ்துமதத்திலே, கிறிஸ்தவர்கள்பைபிலிற்சொல்லும் ஆதிசிருட்டியின் ஆபாசங்கள், கிறிஸ்துமத உற்பத்தியும் அதன்விகற்பமும், பைபில்புத்தகத்தில் நடந்தவியபசாரத்தின் பெருமைகள், நம்துஇந்துப்பெண்களை அந்நியரிடஞ்சேர்த்தல் ஆகா[illegible]தாகாது, தெய்வ வசனங்களெனப்படும் விவிலியநூல் விருத்தத்தில் கிறிஸ்தவர்களே ஒத்துக்கொண்டவைகள்,, என்று [illegible]மகுடங்களால் பற்பலவிஷயங்களெழுதப்பட்டிருக்கின்ற[illegible]. இப்புத்தகங்களிரண்டும் ஆரியர்கள்மன

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

ங்களிக்கப் பெருங்கருவியாக நிற்குமென்பதிற் றடையில்லை. அன்றியும் இப்புத்தகங்களில் பிறர்மதங்களைக்கண்டிப்பதுபோல, ஆரியமதத்தின் பெருமைகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், ஒவ்வொரு ஆரியர்களும் இப்புத்தகத்தைவாங்கிப்படித்தல் அவசியமெனக்கருதுகிறோம்; ஆங்காங்கு பிரசங்கித்துவரும் கட்மிந்து மதப்பிரசங்கிகளுக்கு இவ்விதப் புத்தகங்கள் அதிகுணங்களை உண்டாக்குமென்பதிற் ஐயமின்று. இப்புத்தகங்களை எம்மைபார்க்கும்படிச்செய்வித்த அப்புத்தகாசாரியருக்கு அகமகிழ்ந்து அநேகவந்தனங்களளிக்கின்றோம். இவைதை அச்சிட்டு வெளியிட்டவர் நீடூழிவாழ எமதுபராசக்தமூர்த்தியாகிய பரமேசுவரனைப் பிரார்த்திக்கின்றோம் இப்புத்தகங்களிலோ விஷயங்கள் பலவுள; இதன்விலையோ மிக அற்பம்; அதாவது மூன்று பைகள்; சுலபமாய்க்கிடைக்கும் இப்புத்தகங்களை வாங்கிப்படியுங்கள்; வெளியிடுங்கள்; தந்தமதத்தைப்பாதுகாருங்கள்; ஏனையமதத்தை ஞாயத்தால் வெல்லுங்கள். சுபம்

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்:— 1888 ௵ ஆகஸ்டு ௴ 15௳ புதன்கிழமை

மறுபிறப்பு.
(முன்தொடர்பு)

இப்பொழுது யாம் முற்கூறிய விஷயங்களை அகற்றி வேறு இரண்டுவிஷயங்களைக்கொள்வாம்; அவர்கள் எடுத்துக்காட்டிய பதினொருவிஷயங்களில், நான்கு ஐந்தாவது விஷயங்கள் இவை:—

"மறுபிறப்பு இருப்பதாக பிரத்தியக்ஷமாக அனுபவித்தவன்யாவனுமில்லை" "இனி முற்பிறப்பிருப்பது உண்மையாயின், அங்குயாம் கண்டது எதேனும் நினைக்கப்படாதோ? அங்ஙனம் யாமனுபவித்ததில்லையே" என்பவை. இவ்விதங்கேட்பவரின் கருத்திது: உலகத்திலோர்மனிதன் வெகுகாலம் உயிர்த்திருப்பனேல், "கேற்று உண்மைக்கண்டேன்,, என்றுதொடங்கி பற்பலவிஷயங்களை நினைப்பது வழக்கமில்லையா? அங்ஙனமே, யான் குழந்தையாயிருக்கையில் விளையாடினேனென்று நினைக்கிறானல்லவா? இங்ஙனம் பிறப்புமுதல் இறப்புவரையில் முன்னறிவுகொண்டு பின்னறிவு பெறப்படுகின்றதே, இங்ஙனமிருக்க, மற்றவர்சொல்லும்வழி மறுபிறப்பிருக்குமேல், முற்பிறப்பில் யாம் இவ்விதமிருந்தோமென்று எவனேனும் ஏதையாகிலும் சிந்திக்கின்றானோ? இனி அப்பிறப்பிற்கும் இப்பிறப்பிற்கும் நடுவில் வெகுகாலஞ்சென்றமையால் அவ்விஷயங்கள்தோன்றாதெனின் ஒன்றும் தோன்றாவழிக்கு இவ்விதமுரைத்தல் சமாதானமாகாதே. அநுபவவிருத்தமாய்க் கேவல ஆபாசயுக்திகளைக்கைக்கொண்டவர்கள் மறுபிறப்புண்டென்றும் கொள்கையுள்ளோரென்பதே; இவர்களுக்குச்சமாதானமிது:—

ஐயா, உலகத்தில் யாம் அநுபவித்துவரும் ஒவ்வொரு சங்கதிகளும் அதேமுறைமையில் நினைப்பது அரிது; பாருங்கள்! யாமொவ்வொருதினமும் உண்பது வழக்கமாயினும், இரண்டு

[illegible]

தினங்கள் சென்ற ஒருவர் இரண்டு தினங்களுக்குமுன் எவ்விதசாதம் உட்கொண்டீர் எவ்விததண்ணீர் அருந்தினீரென்றுவது அல்லது, இன்று உண்வேளையில் தலையை எத்தனைமுறை அசக்கினீர், கழுத்தை அசைத்தது எத்தனைமுறைகளெனவினவில், சொல்லக்கூடுமோ? ஆயினும் ஒன்றுண்டு; யாம் பெருமுயற்சியுடன் அனுபவித்துவரும் ஒவ்வொரு சங்கதிகளும் சிறிதுகாலம் நினைக்கப்படும். யாம் குழந்தைப்பருவத்தில் வெகுகஷ்டப்பட்டு அறிந்த வார்த்தைகள், சில புத்தகங்கள் எமது முதுமையில் மறக்கின்றன; குழந்தைப்பருவத்தில எமக்கு எவ்விஷயத்திலும் கவனிக்குங்குறைவாயிருத்தலால (கவனிப்பென்பது முதிர்ந்த இந்திரியங்களாலன்றிப் பொருந்தாதென்பது கருத்து.) அக்காலத்திலனுபவித்தவைகளை யாம் நினைத்தல எவ்விதத்திலும் அமையாது. அக்காலத்தில் யாமிருந்தோமெனபதற்கும் பெரியோர்களையும் அநுமானமுமே பிரமாணமாகும்; ஆதலால், "இப்பிறப்பிலேனும் யான் அநுபவித்தவையெல்லாம நினைக்கப்படு,, மெண்டது ஒப்புக்கொள்ளத் தக்கதன்று. இனி சிலவிஷயங்களேனும் நினைக்கப்படாதோவெனின், எமது குழந்தைப்பருவத்தில் யான் அனுபவித்துவந்தவைகளை மறப்பதுபோல மறந்திருக்கக்கூடுமல்லவா? எமது குழந்தைப்பருவத்தில முதிர்ந்த இந்திரியங்களில்லாமையால். இந்திரியங்கள் என்பதால் இந்திரியசக்திக்காதாரமான கருவிழி முதலியகருவிகளைக்கொள்க. இவைகளைச் சிலவிடம் இந்திரியாதிட்டானமெனவும் விவரிப்பாம்.) அதுகொண்டு எமக்கு ஞாபகமில்லையெனச் சொல்லக்கூடும்; முற்பிறப்பிலோ! முதிர்ந்த இந்திரியங்களிருக்க அவைகளைக்கொண்டறிந்த விஷயங்கள் முற்றிலும் மறக்கக் காரணம் யாதெனின் இதற்குகூறுவாம்; அப்பிறப்பில்ஜீவனுக்கு முதிர்ந்தகருவிகளமைந்திருப்பினும் அப்பிறப்புமாறி மறுபிறப்புவரும் அவ்விந்திரியங்களினதிஷ்டானங்கள் இல்லாமையால் அவ்விந்திரிய சக்திகள் குன்றின. (அவ்வவ்விந்திரியங்களின் அதிட்டானங்களான கருவிழிமுதலானவைகளில்லாமையால், கத்தி ஒடிந்தவன் வெட்டுவேலையை முடிக்கமாட்டான் என்பதுபோல் இவ்விந்திரியங்களும் தமது தொழிலை நிறைவேற்றாதென்பது கருத்து) மறுபிறப்பில் அவ்விந்திரியங்கள் புதியஅதிட்டானங்களைக்கொள்ளின், முற்பிறப்பிலுள்ளவிஷயங்களை நினைக்கவேண்டிய ஆவசியகம் யாது. இனி ஞானகருவிகளான இந்திரியாதிட்டானங்கள் நசித்திருப்பினும், அவைகளைக் கருவியாகக்கொண்டு அறிந்த அறிவு ஜீவனிடமிருத்தலால், ஏன் முற்பிறப்பில் நடந்த விஷயங்களை நினைக்கக்கூடாதெனின், அதிககாலம் அறிவைக் குறைக்குமென்று முன்னமே எடுத்தோதினோமாதலால் அதையேஇங்கு சமாதானமாகக்கொண்டொழிக. அன்றியும், நாம் அநேக பிறப்புகளிலனுபவித்து வந்த ஆகாரமுதலிய விவகாரங்கள் மட்டில் நினைக்கப்படுகின்றனவென்பது உண்மை; பாருங்கள்! பிறந்தவுடன் குழந்தைப்பருவமுள்ளஜீவனும், தான் இச்சரீரங்கொண்டதுமுதல் கண்டறியாத அபூர்வ உலகத்தை உடனே விழித்துப்பார்த்து அக்காலந் தமக்குண்டாகிய பசிதீர மற்றெங்குஞ்செல்லாது தமது தாயின் ஸ்தன்னியத்தை நோக்கிச்சென்று அங்கு முகத்தைவைத்துப் பாலுண்ண யாம்காண்கின்றோம். இதற்குவேறுகாரணம் யாதுமில்லை. இயற்கையாற்றென்று மறுமொழி புகர்வோரை யாம் வினவவேண்டியதொன்றுளது. தாயின் ஸ்தன்னியமே கன்றின் நாவை ஆகர்ஷிக்குமென்றாவது, அல்லது கன்றின் நாவே அதனை நோக்கிச்செல்லுமென்றாவது இரண்டிற்கும் இயற்கையுண்டோ? முற்கூறியது பொருந்தாது. கன்று

[illegible]

மூர்ந்து தானேசெல்வதை யாம்பார்க்கின்றோம்; அக்கன்று முன் உலகத்தையறிந்ததல்ல; அப்பொழுதே பிறந்தது; அக்ஷணமே தாயையறிந்தது; அத்தாயின் முலையை உண்ணச்செல்லுகின்றது. அதுபிறந்தவுடன் அத்தாயை மற்றோரிடஞ்செலுத்தி அதுபோன்ற ஓர் பிரதிமையை அங்கிருத்தின், அக்கன்று அதினிடம் வந்து ஊட்டுவதைப்பார்க்கலாம்; சிலடக்கைகளில் அழகியமாட்டுருவத்தை அமைத்துவைப்பின், அதைக் கன்றுகள் சுத்திமுகரவும் அதின்பாலருந்த முயல்வதையும்பார்க்கலாம். (இது சஞ்சையில் ராஜாங்கமிருந்தகாலத்தில் பிரசித்தவிஷயம்) ஆதலால், ஒன்றுக்கொன்று ஆகர்ஷமெனச்சாதித்தலும் இயற்கையெனக் கொள்ளுதலுமமையாது. முற்பிறப்பில் முதிர்ந்த இந்திரியங்களைக்கொண்டு ஓயாது அனுபவித்த உண்ணல்முதலியவைகளை ஜீவன் மறக்காது நினைக்கிறானென்பதே. உடனே பிறந்தகன்றும் பூமியில்விழுந்து கண்விழித்தவுடன் தன்தாயையறிந்து பாலை உண்ணப்போகின்றதே; இதுவும் முற்பிறப்பு உண்டென்று கூறுவதற்குக் காரணமல்லவோ? இனி சர்வஜந்துக்களுக்கும் சாதாரணமான உண்டி ஒன்றைக்கொண்டே யாம் மறுபிறப்புண்டெனக் கூறவந்தாயில்லை. மீண்டும் பலகாரணங்களுள; அவையாவன :—

உலகத்தில் சிலர் ஒவ்வொருசங்கதியையும் சொல்வதற்குமுன்னரே எளிதிலறிகிறார்கள்; மற்றுஞ்சிலர் பலதடவைகளில் புகட்டினும் மதியாயிருக்கிறார்கள்; இவற்றை உற்றுநோக்கில், ஓர் ஜீவன் தான்முன் சரீரத்தைவிட்டுச் சொற்பகாலத்திற்குள் மற்றொரு சரீரத்தை அடைந்திருக்கலாம்; அங்ஙனமாயின் இடையில் சொற்பகாலமட்டில் சரீரத்தைவிட்டிருந்தவனாதலால், அவனுக்குமுன் அனுபவங்கள் முற்றிலும் மறக்காது புதிய இந்திரியங்களைக் கைகொண்டவுடன் ஞாபகத்தில் வருகின்றது. மற்றொருவன் ஓர் சரீரத்தைவிட்டு மற்றோர் சரீரத்தைக் கைக்கொள்ளும்வரையில் இடையில் காலமனேகமாயிருக்கலாம்; அதுகொண்டு முற்சரீரத்திலனுபவித்த விஷயங்களை அவனிலும் மிகமாய் மறந்திருப்பான்; பிறகு வேறு சரீரத்தை யடைந்தும் மறந்தசங்கதிகளைத் தெரிந்துகொள்வது அவனுக்கு மிகக்கடினமாயிருக்கிறது; இனி முற்பிறப்பிலனுபவித்த விஷயங்கள் இப்பிறப்பிலனேகம் நினைக்கப்படுவதுமுண்டு; அவைகளை மேற்றிசையார் (Gift) எனவழங்குவார்கள்; அதாவது, ஒருவன்பிறந்ததுமுதல் இளமையிற்றானே மற்றவர் பிரேரணமின்றி சங்கீதத்தில் விருப்பமடைகிறான்; மற்றொருவன் சிற்பமுதலிய பலவிஷயங்களில் பிரவர்த்திக்கிறான்; வேறொருவன் திருட்டு முதலிய தீய விவகாரங்களிற் பயின்று வருகின்றான்; ஏனைய விஷயங்களை அவனுக்குக் கற்பிப்பினும் அவன் புத்திக்கேறுவதில்லை; தாம் முன்கொண்டதையே உத்தமமாக நினைக்கின்றான் உலகத்தில் முற்பயிற்சியில்லாத கவிதை (கவனஞ்செய்யுஞ்சக்தி) முதலியவை ஓரிடமுண்டாகக் காண்கின்றோம்; மற்றோரிடத்தில் மற்றவர்பயிற்சி அதிகமாயிருந்தும் எழுதத்தெரியாது தடுமாறிவருவதைப்பார்க்கிறோம்; அவ்விதமே ஒருவன் பிறப்பினின்றும் நற்குணங்களுடையவனும், ஒருவன் அங்ஙனமில்லாதவனும், ஒருவன் நற்குலத்திற்பிறந்து தீயவொழுக்கமுள்ளவனும், மற்றொருவன் வேறுகுலத்திற்பிறந்து நல்லொழுக்கமுள்ளவனுமாகக் காண்கின்றோம். ஆதலால், இவ்வித விஷயங்கள் முற்பவப்பயிற்சியின் றொடர்ச்சியாலன்றி வேறுகாரணங்களாலிணங்காது. அதுகொண்டே ஆஸ்திகர்கள் முற்பிறப்பிலனுபவித்த விஷயங்கள் இடையிற் சிலகால மறந்திருப்பினும்

[illegible]

VILASA VEDA PATASALA PUDUKKOTTAI

புதிய இந்திரியங்களைக் கைக்கொண்டவுடன் மீண்டும் விளங்குகின்றதென்பது; இவ்விதமுறைத்தலே உசிதம்; இவ்விஷயத்திலுள்ள உண்மையிது; ஜீவனுக்கும் சரீரத்திற்கும் ஒன்றுடனொன்று சேர ஒரியப்பிருக்கின்றது; அதாவது சரீரத்தைவிட்டு ஆன்மா ஒருவித சுகதுக்கங்களையு மறியான்; சரீரம் ஆன்மாவில்லாவிட்டால் எவ்விதப்பயனையும் தராது. ஆகலால் இவ்விரண்டிற்கும், அயத்திற்கும் காந்தத்திற்கும் உள்ள சக்தியைப்போல ஒன்றையொன்று சேர்த்துக்கொள்ளுஞ் சக்தியிருக்கிறது; காந்தம் அயத்தையே இழுக்கும்; அயம் காந்தத்தைநோக்கியே செல்லும்; ஆகலால், அவ்வியக்குந்தன்மை இரண்டிற்குமுளதென்றே யறியவேண்டும். இவ்விரண்டு பொருட்களும் சமீபத்திற் சேர்ந்தாலன்றி ஒன்று ஒன்றை இயக்க யாம்கண்டதில்லை; காந்தத்தைக் காணுவிடத்து அயத்திலசைவுதோன்றுவதில்லை; அவ்விதஞ்சீவன சரீரத்தைவிட்டிருக்குங்கால் ஒருவித வியாபாரமின்றி (தூக்கனமாய் யாதொரு விஷயங்களையும் அறியாதென்பது கருத்து) இருக்கிறான். அயமானது காந்தத்தினையிழுக்கவுஞ்செல்வதுபோல சரீரத்தையடைந்த ஜீவன் சுகதுக்கங்களையறிகிறான்; உலகத்தில் அயத்தையும் காந்தத்தையுஞ் சமீபத்திற் சேர்ப்பது அறிவுள்ளவன செய்கையாதலால், அவ்விதமே சரீரத்தையும் ஜீவனையும் அவனவன் கர்மங்களுக்கேற்பச்செய்வதும் பேரறிவு பெருஞ்செல்வமுபெற்ற பரமான் வினையே; உலகத்தில தம்மினுங் குறைந்த அளவுள்ள இரும்பையே காந்தமிழுக்கக் கண்டோமேயன்றி குறைந்த காந்தத்தை பெரிய இரும்பு இழுக்காது: அவ்விதம் இச் சரீரத்தினும் அளவிற்குறைந்த ஆன்மாவென்னுஞ் சூக்குமப்பொருளைச் சரீரமியக்கும். காந்தமும் அயமுமசேர்ந்தவிடமபிரிதல, மற்றொருவன் செயலாலாதல், அதின் சக்திகுறைவாலாதல், அமையும். அவ்விதம் சரீரமும ஜீவனும் விட்டுப்பிரிதலும் கன்மமுதலியவற்றாலாதல்; கருணைவள்ளலாகிய கடவுளின் செயலாலாதல் அமையும. உலகத்தில் கூர்மையாயுள்ள அயத்தின் பாகமே காந்தத்தை நோக்கிச் செல்வதுபோல, ஜீவனும் மரணகாலவாசனையே (அதாவது முன்னுடலை விடுங்காலத்துள்ள ஞானம்) மறுசரீரத்தை நோக்கிச் செல்லுவதற்குக் குறியாகும். இயற்கையால் ஒருசரீரத்தை அவாவும் நிலைபெற்றிருக்கும் ஆன்மா இச்சரீரத்தைவிடினும, தமது கர்மங்களுக்கு உசிதமான ஓர் சரீரத்தை நினைத்துச் செல்லுமென்பது நிச்சயமன்றோ? அதற்கேன தாம்கொண்ட சரீரம் வியாதிமுதலிய வற்றால் கெட்டு அமைப்புக்குலைந்திருக்க, அதைவிட்டு வெளிப்படக்கருதிய ஜீவன் தாம முதியில் அனுபவித்துவந்த பற்பல சரீரங்களில் ஏதேனுமொன்றை நினைத்து அதைநோக்கி வெளிப்படுகிறான்; அவ்விதச்சரீரபிண்டம் அகப்படும்வரையில் சூக்கும சரீரத்துடன் திரிந்துகொண்டிருந்து பிறகு அவ்விதச்சரீரத்தையே போயடைவான்; அதுகொண்டே கீதாசாஸ்திரத்தில் கண்ணபிரான் "எவ்வித எண்ணத்துடனிச்சரீரத்தை விடுகின்றான்" என்றுதொடங்கிய சிலவசனங்களால் இதே விஷயத்தைத் திருவாய்மலர்ந்தருளினார் என்றறிக. ஆதலால், முற்பிறப்பின் இறுதியிலுள்ள (அதாவது மரணத்தின் முதற்கணத்திலுள்ள) வாசனையே மறுபிறப்புக்கு அறிகுறி என்பது திண்ணம். எவனேனும் புண்ணியவசத்தால அக்காலத்தில் தனதறிவைக் கடவுளினது திருவடித்தாமரைகளிற் செலுத்துவானேல், மீண்டும் இவ்விதமாமிச இரத்தங்கள் கலந்த சரீரங்களை யடைந்து வருந்தமாட்டானென்பது பெரியோர் கருத்து. இனி நேரில கடவுளினுண்மையை

[illegible] ராயகம். [illegible] ஸுதமேஜ [illegible] ஸ்வயம் [illegible] நித்யம் [illegible] ஜீவ இதி [illegible] ஜீவ [illegible] இதி நிர்ப: [illegible] கிம் [illegible] விஷயா [illegible].

ஆமதிஷ்வ்ருதி

[illegible]

ராமாயணம்

[அநுபந்த:]

[illegible] ஸ்ரீ [illegible] (America) [illegible] ராமாயணம் [illegible]

றிந்து அவ்வஸ்துவின்கண் அவன் மனம் பற்றுவிடினும், அவ்வதுயிடங்களிற் பற்றுள்ள மனமும் ஏனையப்பிராகிருத சரீரங்களைப் படையாது சாருப்பிய முக்தி எனச்சொல்லத்தக்க திவ்விய சரீர சம்பந்தத்தையே அவ்வான்மா பெறக்கருவியாய் நின்றுளதென்றறிக. ஆதலால், உண்மையைக்கண்டுள்ளமுடைய உயர்ந்தோர்களுக்கு இமையிறப்பென்னுங் கொள்கை உள்ளங்கைநெல்லிக்கனிபோல விளங்கலாயிற்று. இனி ஓர் சரீரத்தை விட்டு மற்றோர் சரீரத்தைப்பெறவரங்கிடையில் ஜீவன் சரீரமற்றிருப்பனேல், எக்காலமும் ஜீவன் சரீரத்துடன் இருப்பானென்பதுயாண்டு டளப்படும் என்னின், அதற்கு விடையை மொழிமாறுகாண்க:—

உலகத்தில் என்றும் ஜீவன் சரீரத்துடனிருப்பானென்பது உண்மையே. மோக்ஷத்தில் அவனுக்குச்சரீரமில்லையென்பது கைவல்யவாதிகளின் கருத்து; மற்ற எக்காலங்களிலாவது ஸ்தூலசரீரமில்லாவிடினும் அதிசூக்ஷ்மமாய் உண்டென்றும், அதுமேயாககாலங்களில காரணத்தக்க சரீரமென்றும், சொப்பனவஸ்தையில் நடக்கும் வியவகாரங்களில் பெரும்பான்மை அச்சூக்ஷுமசரீரத்திற்றென்றும் கொள்ளவேண்டியது. ஸ்தூலம், சூக்ஷ்மம், காரணமென்கிற மூவகைச்சரீரங்களைப்பற்றி ஈசுவரநிரூபணத்தில் எழுதுவாம். ஏனையவிஷயங்களைப்பற்றி மேலே வரும்.

ஸம்ஸ்கிருத பாஷை.

இராமாயணம்

அநுபந்தம்

இதுகாறும் ஸ்ரீமத் இராமாயணத்தைப் பற்றி வரைந்தோமல்லவா? அக்காலத்தில் பலவாருகப்பூமியினமைப்பைக் குறித்தொருவாறு எழுதிமுடித்தோம். சித்ததேசத்தின் விஷயமொன்றுமட்டில் மிகுதியாயிருக்கிறது. இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டம் ௪௩-வது சர்க்கத்தில் சீனு, பரமசீனு, ருஷிகாமுதலிய வடதேசங்களைக் குறித்தபின்னர் உத்திரகுருக்களென ஓர்தேசம் குறிப்பிட்டிருக்கிறது. அதில் சித்தர்கள் குடிகொண்டிருப்பதாக வெளியாகிறது. இத்தேசம் இவ்விந்துதேசத்தினோர் பகுதியாய் பாதமகாராஜன் வம்சத்திலுதித்த குருமகாராஜாவின்தேசமல்ல; ஏனெனில், இத்தேசத்தைக்கூறுவதற்கு முன்னரே "பிரத்தலம், பாதம், குரு, மத்திருகம்" என்று எடுத்தோதிய தேசத்தொடர்பில் குருதேச மடங்கியதாகையால், இவ்வுத்திரகுரு என்பது வேறென்றே கொள்ளற்பாலது. இவ்வுத்திரகுருவென்னும் தேசத்தையே தற்காலத்தவர் (Amarice அமெரிக்கா என்றுவழங்குகிறதாகப் புலப்படுகிறது; அதுகொண்டே இலங்கையை பூமியின் மத்தியாகவைத்து கணனவிதியை எழுதத்தொடங்கிய நம்தேயத்து சோதிடசாஸ்திரிகள் "இலங்கைபத்தியிலும், யவகோடி (Java) கீழ்புரத்திலும், ரோமகம் (Rome) மேற்புரத்திலும், அடியிற் சித்தபுரியும் இக்கோளத்தி லமைந்திருக்கின்றன" வென்று எடுத்து வெளியிட்டார்கள். ஆதலால், இலங்கையின் நேர்கீழ்ப்பக்கத்திலிருக்கும் தேசம் சித்தபுரியென்றால், அது தற்காலத்தவர் வழங்கும் அமெரிகா என்றே சித்திக்கும்; இதன் விரிவை பிறகுகாண்க. இராமாயணமென்பது ஆரியர்களுக்கு ஓர் குலதனம்; இதில் ஒவ்வொரு ஆயிரம் சுலோகங்களுக்கு ஓரெழுத்தாகத்திரட்டி கா

[illegible] "தபஸ்ஸ்வாத்யாய நிரதம்" [illegible] "வைஷ்ணவி [illegible]" [illegible] "வைஷ்ணவி [illegible]" [illegible]

வரலோசக்: ஆமதிஷ்வ்ருதி.

பத்ரிகா:

[illegible]

ஸ்வஸ்தி!

ஸ்ரீ [illegible]

யத்திரிமந்திரம் பகுத்தமைக்கப்பட்டுளது. இதில் உபநிஷத்துக்களுடைய நற்கருத்துகளும் விளங்குகின்றன. இந்நோக்கமுற்றுநோக்கில், இவ்விராமாயணம் பிரணவார்த்தைக் காட்டுங்கருவியாக நின்றுளது. அப்பிரணவத்தி னம்சங்களான அ. உ. மகாரங்கள் அடியிலும் நடுவிலும் முடிவிலும் பொருத்தப்பட்டிருக்கின்றன. துவக்கத்தில் "தபஸ்ஸ்வாத்யாய நிரதம்" என்னுஞ் சுலோகத்தில் அகாரமும், சுந்தரகாண்டம் மூன்றுவது சர்க்கம் இறுதியிலுள்ள "[illegible]" என்றவிடத்தில் உகாரமும், '[illegible]' என்கிற சுலோகத்தினிறுதியில் மகாரமுமமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் முதல் சுலோகம் பிரமதேவனது புத்திரனை வர்ணித்தலால் அவனே அவ்வகாரத்தின் பொருளென்றும், சுந்தர காண்டத்தின்கண்ணுள்ள சுலோகத்தில் "[illegible]" என்பது எங்கும்நிறைந்தவனென்னும் குறிப்பால் நாரணனை விளக்கி, விஷ்ணுவே அவ்வுகாரட்பொருளென்றும், "வைஷ்ணவி [illegible]" என்பதால் வைணவமதத்தில் விட்டுணுவினது [illegible] ருத்திரனைப்பலமென்றும், சைவமதத்தில் சரீரத்திற்கு ஆன்மாபலமென்றுபோல் விட்டுணுவுக்குப்பலத்தைக்கொடுப்பதால் பலமென்றும், அப்பதம் ருத்திரனையே யுணர்த்துவதால் அம்மகாரத்தால் ருத்திரனையும் விளக்கி இம்மும்மூர்த்திகளாகநின்று உலகத்தைப்படைத்துக்காத்துஅழிக்கும் பரம்பொருளையே இவ்விராமாயணம் விளக்குகிறதென்பது வாய்மை. அவ்வழியைப்பற்றிச் சமயம் நேர்ந்துழிவரைவாம்.

இனி வேதாந்தங்களைப்பற்றி சிறிது எழுதப்புகுவாம்.

(வரும்)

கடிதங்கள்

கடிதர்களபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் பாத்தியரல்லர்.

ஒருவர் எழுதுகிறார்,— ஐயா பத்திராதிபர்களே! தங்களால் மாதம் ஒருமுறை அனுப்பப்பட்டதும், அநேகமான ரத்னங்கள்போன்ற விஷயங்களடங்கியதும், நல்லபுத்திமான்களால் அதிக ஆவலுடன் அருந்தப்பெற்றதும், கிறிஸ்துமதம் முதலான அயலமதங்களாகிய இருட்டைத்துரத்த சூரியன் போன்றதும், பெரியோருக்குத்தகுந்த செயலைநடத்துவதுமான ப்ரம்மவித்தையென்கிற தங்கள்பத்திரிகையைப் படித்துப்படித்து பரமானந்தத்தை அடையப்பெற்றோம். தங்களால் பிரசுரிக்கப்பட்ட இப்பத்திரிகையோ! இங்கிலீஷ்பாஷையைப் படிப்பதினால் அவசியம் உண்டாகின்ற நாத்திகத்தில் உழலுகிறவர்களுக்கு நல்வழியைக் காண்பிப்பதாயும், நம்தேசமாகிய இவ்விந்தியாவுக்கு நன்மைசெய்வதே காரியமாய்க்கொண்ட ஹிந்து சுதேசமித்திரன் போன்றபத்திரிகைகளில்முத்திரமென்று உரைக்கத்தக்கதாயும், நம்மவர்கள் வேறுபாஷையை பயிலுவதினால் அசட்டை செய்யப்பட்ட ஸம்ஸ்கிருதபாஷையை முன்னுக்குக்கொண்டுவருவதாயும், மூடர்களுக்கு உபகரிக்கும்பொருட்டு திருக்காலந்திமான்களான நம்முன்னோர்களால் கருணையுடன் செய்யப்பட்ட நூல்களை நாசமின்றிக்காப்பதாயுமிருக்கின்றது. இவ்விதமாய் வித்துவான்களால் வெகுமதிக்கப்பட்டதும், ஆசிரியர்களால் ஆதரிக்கப்பட்டதும், தேவபாஷையைப்பயில வெகுஆவலுள்ளவர்களால் விரும்பப்பட்டதுமான இப்பத்திரிகையை துதிப்பதற்கும், நிந்திப்பதற்கும் நாம் எவ்வளவு! இப்படியிருந்தும், அ

[illegible]

யல்தேசத்தவர்கள் இராச்சியாதிகாரமென்கிற பாரத்தை நம்மவர்கள் வண்டியில் பூட்டப்பட்ட மாடுகள்போல தூக்கிக்கொண்டிருக்கிறார்களென்றும், அவர்களால் ஆதரிக்கப்பட்ட தேவபாஷைக்கு ரொம்பவும் கீழ்ப்பட்டதான இங்கிலீஷுபாஷையை பாலியம் முதல் படிக்கிறார்களென்றும் மேற்குதேசத்துப்பாதிரிகளால், உபதேசிக்கப்பட்ட கிறிஸ்து மதத்தைத் அங்கீகரிக்கிறார்களென்றும், இவைகள்போன்ற இன்னும் அநேகமான அனர்த்தபரம்பரையைத்தடுக்க, கீர்த்திபெற்ற மகான்களான உத்திர தேசத்திய "பனர்ஜி" முதலானவர்கள்போல தாங்களும் முயலுகிறீர்களென்று நாம் அடையும் சந்தோஷத்தினால் பின்வரும்சிலவார்த்தைகள் நம்மிடமிருந்து உண்டாகின்றன.

2 தாங்கள் சுயகாரியத்தைகூடப்பாராட்டாமல் ஆங்காங்குசமாஜங்களை ஏர்ப்படுத்தி இந்துமதத்தைக்குறித்து விசித்திரங்களாகவும், மதுரங்களாகவும், சபையில் வந்தவர்களால் சிலாகிக்கத்தக்கதுமான உபந்நியாசங்களைச்செய்து, அஞ்ஞானமாகிற இருட்டில் வருந்தும் நம்மவர்களுக்குச்சித்தாஞ்சனத்தினால் போல்நல்வழிகாட்டினீர்களென்று கேட்டும் பார்த்தும் இருக்கிறோம். இப்பேர்க்கொற்ற உபந்நியாசங்கள் திவான் டஹதூர் ரகுநாதராவ் முதலான பண்டித மணிகளால் செய்யப்பட்டுவந்தபோதிலும், அவைகள் தெக்ஷிணத்தில் வாழும்நமக்கு இலேசாய் கிடைக்கக்கூடியவையல்ல, சிற்சிலகாலம் கிடைத்தபோதிலும், எல்லா மதங்களையும் அனுசரிக்கவில்லையென்று ஜனர் சொல்லுகிறார்கள். மேலும் இங்கிலீஷ்பாஷையை மாசுமறக்கற்ற சிலர்கள் அங்காங்கு சமாஜங்களை ஏற்படுத்தி மதத்தைக்குறித்து உபந்நியாசங்கள்செய்தபோதிலும், அவைகளெல்லோர்களுக்கும் பொதுநன்மை செய்வதல்ல; ஏனென்றால் அவர்களில்சிலர் பாலியமுதற்கொண்டு சுயபாஷை படியாதவர்களாயிருக்கிறார்கள். சிலர் சுயபாஷையைக் கொண்டு உபந்நியாசம்செய்வது மேற்குதேசத்திய பாஷையைப் படிப்பதினால் பரிசுத்தமாயிருக்கின்ற தங்கள் நாவுக்கு தூஷணமென்று எண்ணுகிறார்கள். மற்றும்சிலர் இரண்டுபாஷைகளிலும் உழைத்துத தெளிந்த ஞானத்தை அடைந்தவர்களானாலும் கனவில்கூட வேதம் வேதாங்கமுதலானவைகளைப் பாராதவர்களாய் தங்களுக்குத்தோன்றியதைப்பிதற்றுகிறார்கள் ஆனால் இந்ததிரிச்சிராபுரத்தில் வேதம், சாஸ்திரம் முதலானவைகளுடைய உண்மையான அர்த்தங்களைமற்றவர்களைக் கொண்டாவது விசாரித்து இங்கிலீஷ தமிழ் என்கிற கடல்போன்ற இவ்விரண்டு பாஷைகளையுங்கடந்தவர்கள் ஏனம் நண்டர்களை யார் உளரோ? அவர்களைக்குறித்து இந்த ஙிர்தைசெய்யபபட்டிருக்கின்றதென எண்ணக்கூடாது. ஆகையால், இக்காலத்து நம்மவர்களுக்கு இங்கிலீஷ் பாஷையானது போல, ஸம்ஸ்கிருதமும் தேசபாஷையும் முன்னுக்குக்கொண்டுவரப்படவேண்டுமென்று நினைக்கிறோம்.

3- சென்றவாரத்தில் கும்பகோண சர்வகலாசாலையில் உபாத்தியாயராயிருக்கின்ற சத்தியநாதனென்றுபெயர்கொண்ட இங்கிலீஷ் தர்க்கம் கற்றுக்கண்ட ஒருவரால் இவ் விந்தியாவில் வித்தியாப்பியாசத்தைக்குறித்து ஒரு உபந்நியாசம் செய்யப்பட்டது. அப்போதும், சர்வகலாசாலைமாணுக்கர்கள், பி. ஏ. பட்டம்பெற்றவர்கள் இவர்களால் ஆறு ஏழு தடவைகூட்டப்பட்ட சபைகளிலும் தொண்டு தொட்டு வழங்குவதானவும், அகத்தியர்முதலான மகரிஷிகளால் உண்டாக்கப்பட்டதானவும்,

[illegible] (About Indian education) [illegible]

[illegible] (Black Bourne) [illegible]

[illegible]

கம்பர் முதலான மகாகவிகளால் விருத்திசெய்யப்பட்டதுமான தமிழ்பாஷையைவேரறுப்பதில் விருப்பங்கொண்டபரமதமாகிற பிச்சத்தைத்தூண்டிவிடுவதற்குக் கையிற்பிடிக்கப்பட்ட மயில்தோகைகளை யுடைய அயல்தேசத்தவர்களான கழுகுகளுக்கு இரைபோடுவதில் கூர்மைபுத்தியையுடைத்தானசிலமொழிந்திருந்து சுயபாஷைகளை ஆயிரக்கணக்காயும் கோடிக்கணக்காயும்வெட்டிப்புதைகுழியிற்றள்ளி ஆங்கிலேய பாஷையை முன்னுக்குக்கொண்டுவரப் பிரயாசப்படுவோமென்று சபையார்களுக்குப்பயத்தை உண்டுபண்ணும் சிலவார்த்தையைச்சொன்னார்கள். நேற்றுதானே இப்பட்டணத்திற்குச் சமீபத்திலிருக்கின்ற உறையூரென்னுமிடத்தில் நம் சிநேகிதர்களாலேற்படுத்தப்பட்டஒருசபையில், அக்கிராசனாதிபதியாகவீற்றிருந்த பிளாக்போன் (Black Bourne) என்னுமொரு ஐரோப்பியர், தேவபாஷை தேசபாஷை இவைகளில் நம்மவர்கள் செய்யுமசட்டையைக்குறித்துச் சபையார்க்கு வெட்கத்தையுண்டாக்கும்படியான வார்த்தைகளால் பரிகாசம்செய்தார். நம்மவர்களுடைய கவனமின்மையைப் பாருங்கள்! அயல்தேயத்தவர்களுடைய பரிகாசத்தில் புத்திசாலித் தனத்தையும்பாருங்கள்! அந்தோ!!! நவரசங்கள் பொழிகின்ற காவியங்களால் பிரகாசிக்கப்பெற்ற அநேகமான வேத வேதாங்கங்களாகிற அங்கங்களின் முகுகளோடு கூடிய விசித்திரமான அணிகளாகிற அலங்காரங்களினால் பூஷணஞ்செய்யப்பெற்ற திருகால ஞானிகளாகிற நம்முன்னோர்களால் பெண்ணிடத்திலிருக்கும்பிரியத்தைக்காட்டிலும், தாயிடத்திலிருக்கும் மரியாதையைக்காட்டிலும் அதிகமாகப்பரிபாலனஞ்செய்யப்பட்டநம்பாஷைகள், நீசப்பெண்கள் போல நம்மால்தள்ளப்பட்டால், வேதவேதாங்கங்கள் படிக்கப்படாமல போனால இவ்வுலகத்தில் அயல் தேசத்தவர்களால் நாமும் நாகரீகமடைந்தவர்களென்னும் கணக்கில்சேர்க்கமெண்ணப்படமாட்டோமென்னும்பயத்தால் தம்முடையஅங்கங்கள் நடுங்குகின்றன. அன்னியமதங்கள்பரவுவதைத்தடுப்பதற்குமடாதிபதிகளடிக்கடி எழுப்பப்பட்டபோதிலும் செவிடர்கள் போல் வேடம்பூண்டுகொள்ளுகிறார்கள். அரசர்களாயினும், தனிகர்களாயினும், கிறிஸ்துமதமென்கிற பிசாசைத்துறத்துவதற்குமுன்னுக்குவருகிறதில்லை. இம்மாதிரியாக மடாதிபர்களிடத்திலிருந்து உபகாரத்தனத்திற்கு இடத்தைக் காணமலும் அரசர்களிடத்திலிருந்து ராயத்தின் கிரந்தத்தைக்கூட முகாமலும் தனவான்களிடத்திலிருந்து உதாரலேசத்தை உணராமலும் இன்னதுசெய்கிறதென்று தெரியாமல் அங்குமிங்கும் திரிந்து ஓரேவிதமான பிடிப்பைக் காண்கின்றோம்.

4- இந்து பத்திரிகையில் கும்பகோணத்தில் விளங்குகின்ற சுதேசபாடசாலைக்குத் தலைமை உபாத்தியாயராயிருக்கின்ற நமக்குவித்தியாகுருவாகிய ம ௱ ௱ ஸ்ரீ அப்புசாஸ்திரியவர்களுடைய பிரார்த்தனையால் கொஞ்சநாளுக்கு முன்பாக நம் மதத்தைக்குறித்து தாங்களொரு உபந்நியாசம் செய்தீர்களென்று தெரியவந்தது. இம்மாதிரியாகவே தங்கள் உபந்நியாசரீதியை அனுசரித்து சாஸ்திரிகளும ஆங்காங்கு கும்பகோணத்தில் பிரசங்கம் செய்கிறார்களென்று கேழ்வைப்படுகிறோம். அவர்களுடைய அதிகாரத்திலிருந்து சுதேசபாடசாலையில் ஸம்ஸ்கிருதம், தமிழ் இரண்டுபாஷைகளும் இங்கிலீஷைப்போல் கண்டிப்பாய்ச்சொல்லிக்கொடுக்கப் படுகிறதென்று நமக்குசமாசாரம் வருகிறது; இம்மாதிரியாகவே இவ்விராஜதானியில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சுதேசபாடசாலைகளில் தலைமை உபாத்தியாயர்கள் பிரயாசப்பட்டார்களேயானால் நம் பாஷைகள் அபிவி

[illegible]

ர்த்தியை யடையும்; நம் மதம் முன்னுக்கு வரும்; நம்நா ட்டுக்குநன்மை விரும்புகிறவர்கள் சந்தோஷப்படுவார்கள்; பரமதாசாரமும் தூரவிலக்கப்படுமென்று நிச்சயிக்கின்றோம். இந்ததேசமானது பாதிரிகளால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளால் கவரப்படுகிறதென்றும், அவைகளில் உபதேசிக்கப்படுகிற 'பைபிளானது' அநேகம் மாணாக்கர்களை கிறிஸ்துவமதமென்கிறபடுகுழியில் தள்ளுகிறதென்றும், சுயதேச அபிமானம் என்கிற கௌரவத்தைக் கெடுக்கிறதென்றும், சுயதேசபாடசாலைகளின் தலைமைஉபாத்தியாயர்கள்கண்டு ஒற்றுமையையடைந்து மதோபதேசத்திலும் ஸம்ஸ்கிருத தேசபாஷைகள் இவைகளைசொல்லிக்கொடுப்பதிலும் பிரயத்தனப்பட வேண்டுமென்று அஞ்சலிபந்தம் செய்து நமஸ்கரித்துப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
திருசிரபுரம்
மகாஜனபாடசாலை உபாத்தியாயர்
பஞ்சாபகேசஐயர்

ஆரியஜன ஐக்கியம்

ஐயா, நற்சொற்களைக் கேண்மின்! யாம் "ஆரியஜனங்களின்ஐக்கிய" மென்னுமகுடத்தின்கீழ் வெளிவந்த அற்புதமான ஓர் புத்தகத்தைக் கண்ணுற்றேன்; அதின் சொற்கள் மிகமெல்லியனவும், எளியநடையிலமைந்தனவும், இனிய நடைபொருந்தியனவேனவும் படிப்பவர்களுக்கு ஆநந்தத்தைக் கொடுக்குமெனவும் நம்புகிறேன். இப்புத்தகத்தை இயற்றிய ஸ்ரீமான் ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணியஐயரவர்கள் B. A. மிகச்சந்துஷ்டியுடன் எம்பாலனுப்பினர்; இவர் ஆங்கிலேயபாஷையில் அதிக பயிற்சியடைந்தவரென்றும், நம துள்நாட்டுச் சீர்திருத்தத்தில் ஓயாது பாடுபடும் பரோபகார பரமசீலரென்றும், நம்மவர்களுக்கு ராஜரீக அறிவை ஊட்டித்தேசாபிமான வழுதைப்புகட்டும் இந்துபத்திரிகைக்கு ஆசிரியரென்றும், இமயமலைதொட்டு கன்னியாகுமரி இறுதியாயுள்ள இப் பாதகண்டத்தில் நற்புகழ்பெற்றவருமிவரே என்பது எல்லோருமறியற்பாலதே.

இஃது சிறுபுத்தகமென்றெண்ணத்தக்கதன்று. இவ்விந்தியதேசத்திற்பிறந்த ஆரியர்களுக்கு அந்தரங்க நேசனென்றே எண்ணுகிறோம். பாருங்கள்! அப்புத்தகத்திலடிக்கடி வெளியிடப்பட்ட ஒவ்வொருவசனங்களும் தேசாபிமானமென்பதை உருவாகக் கொண்டு நம்மவருள்ளத்தைக்கவரும் உயர்மணிக் கோப்பாகின்றது. இதேபுத்தகம் ஆங்கிலேயபாஷையில்எழுதப்பட்டிருந்தால் இத்தேயத்துஜனங்களனைவரும் கண்டுகளிக்கவிடம்பெறாது. செந்தமிழிலெழுதப்பட்டிருப்பதால் இத்தென்னாட்டவர்களுக்கு இதுஒரு பெரியவுபகாரம் செய்யவலிமைபெறும். அப்புத்தகத்தில் "ஆரியர்கள் உலகத்திலுள்ளவர்களுக்குள்ளுயர்ந்தவர்களென்றும், அவர்கள்கொண்டமதம் எல்லா மதங்களினுமேன்பாடுடைத்தென்றும், இவர்கள் ஆசாரங்கள் எல்லாம் மற்றவர் புகழப்பதம் பெற்றவையென்றும், இவர் முன்னோர் நிலைமையை மிகவியக்கத் தக்கதென்றும், இப்பாதகண்ட வாசிகளுக்கு ஆதியில் ஒற்றுமையே பெரும்பயனை விளைவித்ததென்றும், மேற்றிசையார் இவ்விடத்திலடிவைத்தகாலத்தில் அவர்களுக்கு ஓர்குறைவு நேரிட்டதென்றும், சில கொடுங்

[illegible] (National Congress) [illegible]

[illegible]

கோன்மன்னர்களால் இடையிலவர்களடைந்த கஷ்டமின்னதென்றும், இனி ஆங்கிலேய அரசாட்சியில் யாம்பெற்ற நற்பயன்களிவையென்றும், இக்காலத்துச் சட்டதிட்டங்கள் பெரும்பான்மையில் எமக்குச் சுகத்தைப்பயக்குமென்றும், அதில்யாம் பிரத்தியக்ஷமாயடையத்தக்கபலன் இவையென்றும், இவ்விராச்சியாதிகாரவிஷயத்தில் முயன்றால் இவர் அஃதிலும் பாத்தியதை பெறுவாரென்றும், அதற்கென்றே இத்தேசத்திலுள்ள தேசாபிமானிகளனைவருங்கூடிப் பிரயாசைசப்படுகிறார்களென்றும், அதற்கெனவே ஆரிய "மகாஜனசபை" எனச்சொல்லத்தக்க (Nation l Congress) உதித்ததென்றும், அதனால்கடந்த இரண்டுவருடங்களில யாம்அறிந்திருக்கும் பயனின்னதென்றும், அவ்விஷயத்தில் ஆங்கிலேயர்கொண்ட அபிப்பிராயம் இத்தன்மைத்தென்றும், அதிற்கென இத்தேசத்தவர்கள் செய்யவேண்டிய நன்முயற்சிகளிவையென்றும், அதினாலுண்டாகும் நற்பயனையடையவேண்டியவர்கள் இவ்விந்துக்களேயென்றும், இதன் நான்காவது கூட்டம் பிரயாகைக்ஷேத்திரத்தில் கூடப்போகிற,,தென்றும் இன்னுமனேகஅறியவிஷயங்களும் அடங்கியிருக்கின்றன. ஐயா, உலகத்தின் தற்காலரீதியை யறிய விரும்புகிறவனும், தேசாபிமானம்பெற்றவனும் தம்பெற்றோர்க்கும் பிறந்தேசத்திற்கும் உழைப்பவனும் இப்புத்தகத்தைப்படிக்க அதிகாரம்பெறுவான். இப்பெரியபுத்தகத்தின் விலை அணா.2. அதிலும் அதிகலாபங்கிடைத்தால் பொதுநிதியில் (National Fund) சேர்க்கப்படும். இது நமக்கொருபெரும்பாக்கியம். இப்புத்தகத்தை நமக்கனுப்பியதற்காக சந்தோஷமகிழ்ந்து அளிக்கும் வந்தனங்களைஐயரவர்களே அங்கீகரிப்பாராக.

பத்திராதிபர்.

சிதம்பரம் "சித்விலாசினி,, பாடசாலை

அந்தோ!! இப்பாடசாலையின் தற்கால துர்தசையை எடுத்துரைக்க எமது மனம் வருத்தமுறுகின்றது. அப்பாடசாலை அடிக்கடி ப்ரம்மவித்தையினுற்றதோழியாய் மற்றவள் பெறாத பெரும்புகழைப் பெற்றாள். தன்னையண்டிய குழந்தையை அலங்காரத்துடன் போஷித்துவந்தாள். அதைக்கண்டு எமது மனம்பரவசமாய் இதைப்புகழ்வதாலுண்டாகும் சிற்சில லௌகிக விரோதங்களையும் கவனியாது அடிக்கடி "சாரமறிந்தவர் சபாப்திசெட்டியார்' என்றுபத்திரிகையில் வெளியிட்டுவந்தோம். இப்பொழுதோ! எல்லாம் இதற்குமாறாகவே தோன்றுகின்றது. இது சுமார் மூன்றுவருடகாலமாய் விருத்தியடைந்துகொண்டுவந்தது. இதில் உடற்பியாசத்தில் மிகவலிமையுள்ள பிள்ளைகள் அநேகமிருந்தார்கள். இப்பொழுது அவனாயேனும் அவனைப்போன்றவனாயேனும் அங்குகாண்பதரிதாயிற்று. இதற்குக் காரணம், இப்பிள்ளைகளுக்கு இலக்கிய அறிவைப்புகட்டக்கங்கணம்பூண்டுநின்ற ப்ரம்ம ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திசாஸ்திரிகள் இப்பாடசாலையை வேறுகாரணத்தால் விட்டகன்றார். இது இப்

[illegible]

[illegible]

பொழுது தாயை யிழந்த கன்றுபோல் பரிதவித்துத் தவிக்கின்றது. இச்சமயத்திலேனும் ஆதரித்து அதை நல்லஸ்திதிக்குக்கொண்டுவரத் தக்கமுயற்சி செய்யாமையால் அப்பாடசாலையினதிகாரிகளுக்கும் அதில்விருப்பம் குறைந்து வருவதுபோற்றோற்றுகின்றது. ஆரியர்களே! நம் குறையைக் கேளுங்கள்; இக்காலத்தில் வடமொழிப் பயிற்சியில் பற்றுண்டாவது மிக அரிது. அஃதுண்டாயினும், சொற்பகாலத்திற்குள் மாறிப்போகின்றது. இதைக்காட்டிலும் தௌர்ப்பாக்கியம் எமக்கு யாதுளது? இப்பொழுதுபாடசாலைக்குச் சரணம் ஒருவருமில்லை. "நீழ்கவையினுமவை, கரையேற்றினுமேற்று; இரண்டும் உன்கையிலுளதே,, என்பதுபோல இதை எவ்விதஞ்செய்யவும், அப்பாடசாலையில் படிப்பிக்கத் தற்காலம் வந்திருக்கும் ப்ரம்மஸ்ரீ மார்க்கசகாய சாஸ்திரிகளும், அப்பாடசாலைக்குப்பரமாதிகாரியான செட்டியாரவர்களுமே சக்தர்களென நம்புகிறேம். இவ்விஷயத்தில் விசேஷமாக முயலாவிடில், இப்பாடசாலை என்னும் நங்கை பெரியோர் மனதை வருத்துவாள் போலும். அதுகொண்டே யாமனமுருகி நமது மலைமங்கமணவாளனை வேண்டுவதியாதெனில், பரமான்மா, அப்பாடசாலையைச்சீர்திருத்த அச்செட்டியாரையும், பிள்ளைகளுக்கு நற்பயிற்சியை யூட்டி முன்னுக்குக்கொண்டுவர இப்பாடசாலை உபாத்தியாயரையும் பிரோபித்துப் பெரியோருள்ளைக்களிக்கச் செய்வானென்பதே.

இங்ஙனம்,

சிதம்பரவாசி

வித்தியார்த்தி.

[illegible]

[illegible]

௫௬ [illegible]
௫௭ [illegible]
௫௮ [illegible]
௫௯ [illegible]
௬௰ [illegible]
௬௧ [illegible]
௬௨ [illegible]
௬௩ [illegible]
௬௪ [illegible]
௬௫ [illegible]
௬௬ [illegible]
௬௭ [illegible]
௬௮ [illegible]
௬௯ [illegible]
௭௰ [illegible]

பாலநீதி.

முன்தொடர்ச்சி

௫௬ தெரிந்ததைத்தெளிவத் தெரியச்சொல்லும்.
௫௭ தேவனைநம்பித் தேறுதலாயிரு.
௫௮ தைரியம்விட்டால் வைரிமிரட்டும்.
௫௯ தொல்லைவருமுன் துலைக்கவழிபார்.
௬௰ தோன்றினபடிக்குத் துணிந்துசொல்லேல்.
௬௧ நன்றியில்லான் நற்கதியடையான்.
௬௨ நாவுக்கின்பம் நற்குணம்விளம்பல்.
௬௩ நித்தியமோட்சம் நிச்சயமாஞ்சுகம்.
௬௪ நீரிற்றுணிந்து நீந்துதற்கஞ்சு.
௬௫ நுட்பமாய்நூலை உட்புகுந்தறி.
௬௬ நூறுவயசும் நொடியிற்போய்விடும்.
௬௭ நெறிதவறாமல் நிற்பதுநன்மை.
௬௮ நேசன்போல வேஷம்போடேல்.
௬௯ நொடிப்பொழுதாகிலும் நோவுக்கிடங்கொடேல்
௭௰ நயப்பேசினால் நயக்குறைவுண்டாம்.

ப்ரம்மவித்யா.

{க.புத்தகம்}

பத்திர கிரயம்

1 வருஷ	2—12—0
6 மா	1—8—0
3 மா	0—14—0
1 காபி	0—2—6

இலங்கைக்கு, 3—8—0.

{VOL-3}

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

{இலக்கம்-ரு}

பத்திரிகையத்தைமணியார்டராகவாவது, ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால்லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்புதல்வேண்டும்.

{NO.5}

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௮ வருஷ ஆகஸ்டுமீ ௩௧உ (ஈ) சர்வதாரி வருஷ ஆவணிமீ ௧௭உ வெள்ளிகிழமை.

[illegible]

[illegible]

சரித்ராப்பயிற்சி.

இங்கிலாந்துதேசத்து உத்தமகவிகளுக்குள் ஒருவரென்று சொல்லக்கூடிய ஷெல்லியென்னும் ஒருமகாவித்துவான் சரித்திரப் பயிற்சியைப்பற்றி பின் வருமாறு சொல்லுகின்றார். முன் காலத்து விருத்தாந்தங்களை நானறிவேன். அவ்வறிவை நான் நன்னெறியிற் செலுத்துவதற்கு ஒருகவியாகச் செய்துகொள்வேன். இப்படி நானடையும் தெள்ளறிவினால் என் குற்றங்களெவை? இதற்கு முன்னெல்லனிடத்திலிருந்த அறியாமையாது? என்று ஆராய்ந்தறிந்து சுகமடையப்படுவேன். இக்கவியின் இம்மெய்யான கருத்திற்கிணைய பூர்வகாலத்துக்கிரேக்கர், ரோமர், ப்ரசீகர், அராபியர் முதலிய ஜாதியர்கள் சரித்ரா ஆராய்ச்சி புத்தியைத் தெளிவாக்குகிறதென்பதையறிந்து சரித்திரவிஷயமான செத்தியங்களை மிகுந்த ஆதரவுடன் விருத்தி செய்தார்களென்பது எல்லோர்க்கும் தெரிந்தவிஷயம். நம்மவர்களேவெனில் அவ்வாறு சரித்திர ஆராய்ச்சி செய்யாததினால் சுவாதீனமற்றவர்களாய் தங்கள் நாட்டின் நன்மையின்பொருட்டு முயற்சி செய்யாமல் ராஜ்யாதிகாரத்தில் விருத்தியடையவில்லையென்பது யாருக்குத்தான் தெரியாது? எந்நாடுகளாயினும் அவைகளின் வாழ்விற்கும் கேட்டிற்கும் காரணம் சரித்திர ஆராய்ச்சியினால்தானறியக்கூடும். முற்காலத்து வித்துவான்கள் எளியவசனநடையில் நூலகள் ஒன்றும் செய்யாமல் உத்திரேகமுள்ள கவிரூபமான இதிகாச புராண மகாகாவியம் முதலானவைகளால் நடந்த விருத்தாந்தங்களை ஒருவாறு வர்ணித்தவர்கள். ஆகையால், எளியநடையில் எழுதப்பட்ட முழுதும் நம்பத்தக்க சரித்திர நூல்கள் இப்பாதகண்டத்தில் இல்லை. நம்முடைய துர்ப்பாக்கிய வசத்தால் நம் முன்னோர்களின் பெருமையையும் திறமையையும்பற்றிய மெய்யான விபரங்களை நாம் வாசிக்கக் கொடுத்துவைக்கவில்லை. நம்மவர்களு